**உரித்துக் காப்புறுதி நிதியம் - 2023**

-----------------------------------------------------------------

1. **நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

உரித்துக் காப்புறுதி நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றின் பொழிப்பினை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் விடயப் பரப்பு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியிருந்தது என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தன என்பதும், நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 71 ஆம் பந்திக்கு இணங்க மீளாய்வாண்டின் | அடுத்து வரும் கணக்காண்டின் போது சரியான | தொடர்புடைய நியமங்களுக்கு இணங்க |

| | | |
|---|---|---|
| இறுதியில் காணப்பட்ட 12 மாதங்களுக்கு குறைந்த ரூபா 102,468,413 மற்றும் 12 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 81,951,350 ஆன முதலீடுகள் வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வகைப்படுத்தலுடன் முதலீடு கணக்கீடு செய்யப்படும் என அறியத்தருகின்றோம். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| வருமானம் | | 2009 இன் 01 ஆம் இலக்க உரித்துக்களை பதிவு செய்யும் (காப்புறுதி நிதியம்) கட்டளை இலக்கம் 42(ஆ) இன் பிரகாரம் உரித்துக்கள் பதிவாளரினால் 02 வாரங்களுக்கு ஒரு தடவை உரித்து வருமானம் தொடர்பான அறிக்கை பிரதான அலுவலகத்திற்கு வழங்க வேண்டிய போதிலும், உரித்துக்கள் 28 பதிவாளர் அலுவலகங்களின் வருமான அறிக்கை 672 இல் 50 அறிக்கைகள் மீளாய்வாண்டின் போது கிடைக்காதிருந்ததுடன் நிதியத்தின் வருமானம் உரிய அலுவலகத்தால் வங்கியில் இடப்படுகின்ற நிதியின் பெறுமதியின் பிரகாரம் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதற்காக வருமான அறிக்கையை அடிப்படையாகக் கொள்ளமையின் காரணமாக நிதியத்தின் மொத்த பெறுவனவுகளின் சரியான தன்மை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | உரிய அறிக்கை குறித்துரைத்த நியமத்துடன் பிரதான அலுவலகத்திற்கு வழங்காமை மற்றும் நாளாந்த வருமானம், காசேட்டில் உள்ளடக்கப்பட்டமையால் இந்த நிலைமை அறிக்கையிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வருமானம் சரியாக அறிக்கையிடல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| 2009 இன் 01 ஆம் இலக்கம் உரித்துக்களை பதிவு செய்யும் (காப்புறுதி நிதியம்) கட்டளை இலக்கம் 42(உ) | ஒவ்வொரு 14 நாட்களின் இறுதியிலும் உரித்துக்கள் | வங்கி அறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு அலுவலகத்திலும் | வருமானங்களை சரியாக |

| | | |
|---|---|---|
| பதிவாளரினால் சேகரிக்கப்பட்ட பணம் உரித்துக்கள் தொடர்பான பதிவாளர் நாயகத்தினால் பிரதான காசேட்டில் தனித்தனியாக வரவு வைக்க வேண்டிய போதிலும், நாளாந்த வருமானமாக தினந்தேறும் பெறுவனவுகளின் கூட்டு மொத்தம் காசேட்டில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | உள்ளடக்குதல் நடைமுறையில் வசதியீனமாக இருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | அறிக்கையிடல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 54,885,560 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 25,466,815 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 29,418,745 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு உரித்துக்களை பதிவு செய்யும் வருமானம் ரூபா 20,816,210 இனால் அதிகரித்தமை மற்றும் திறைசேரி முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 8,608,046 இனால் அதிகரித்தமை என்பன பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2009 இன் 01 ஆம் இலக்கம் உரித்துக்களை பதிவு செய்யும் (காப்புறுதி நிதியம்) கட்டளை 42(ஆ) மற்றும் (இ) பிரிவுகளின் பிரகாரம் சில உரித்துக்கள் அலுவலகங்களினால் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பட்ட உரித்து வருமானம் தொடர்பான அறிக்கை ''ஆர்.ஜீ.ரீ/ஐ.எப் 03'' படிவத்திற்கு இணங்காதிருந்தமையும் முகாமைத்துவத்தால் சரியாக படிவங்களுடன் அறிக்கை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நிதியாண்டில் இருந்து ''ஆர்.ஜீ.ரீ/ஐ.எப் 03'' படிவத்திற்கு இணங்க உரித்து வருமான அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய கட்டளைக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்டமை உறுதிப்படுத்துகின்ற முகாமைத்துவ சபை கூட்ட அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. முகாமைத்துவ சபைக்காக அதன் தலைவரால் மாத்திரம் நிதிக்கூற்றுக்கள் கையொப்பமிடப்பட்டிருந்தது. | நிதியத்தின் முகாமைத்துவ சபை கூட்டத்திற்கு சமர்ப்பித்து அந்த வழிகாட்டியின் பிரகாரம் மீண்டும் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய ஏற்பாடுகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1998 இன் 21 ஆம் இலக்கம் உரித்துக்களை பதிவு செய்யும் சட்டத்தின் கீழ் காணிகளின் உரித்தை பதிவு செய்யும் போது தரப்பினர்களுக்கு ஏற்படுகின்ற நட்டத்திற்காக அரசாங்கத்தால் இழப்புக்களை கையளிக்கும் நோக்கில் உரித்து காப்புறுதி ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், இழப்பு கோரி வழக்கு தொடர்தல் அல்லது நீதிமன்ற கட்டளை மூலம் பிரதிவாதியாக பெயரிடப்படாமையினால் அல்லது 2010 ஆம் ஆண்டில் இருந்து மீளாய்வாண்டு வரை எந்தவொரு இழப்பீட்டு நட்டத் தொகையும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த நிதியம் தொடர்பாக பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்ற தீர்ப்பின் மூலம் பிரதி வாதியாக பெயரிடப்படாதிருந்தமையால் இது வரை நிதியத்தின் மூலம் எந்தவொரு இழப்பீட்டு சேத இழப்பும் செலுத்தப்படாதிருந்ததுடன், உரித்துக்களை பதிவு செய்யும் சட்டத்தை திருத்துவதற்காக கலந்துரையாடல் நடைபெறுகின்றமையினால் எதிர்காலத்தில் நிதியம் தொடர்பாக பொது மக்களுக்கு அறிவிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | பொது மக்களுக்கு அறிவித்து நிதியத்தின் அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் முகாமைத்துவ சபைக் கூட்டம் 08 தடவைகள் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 04 கூட்டத் தடவைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | உரித்துக் காப்புறுதி நிதியத்தின் முகாமைத்துவ சபையினால் காலாண்டிற்கு ஒரு கூட்டம் மாத்திரம் நடாத்துவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 04 கூட்டத் தடவைகள் மாத்திரம் நடாத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் நான்கு சந்தர்ப்பங்களின் போது பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 68 சதவீதம் முதல் 1,422 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவியாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சபை கூட்டங்கள் 04 தடவைகள் மாத்திரம் நடாத்தியமை மற்றும் கணக்காய்வு முகாமைத்துவ கூட்ட தடவைகள் ஒன்று மாத்திரம் நடாத்தியமையின் காரணமாக உபசரிப்பு செலவினம் குறைவடைந்தமை, காகிதாதிகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை போதியளவில் இல்லாமை மற்றும் பொருளாதாரத்தில் காணப்படுகின்ற பண வீக்க நிலைமையும் இதற்கு காரணமாக இருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | செலவின மதிப்பீடு சரியாகவும், பொருத்தமானதாகவும் தயாரிக்கப்படல் வேண்டும். |